1. At the time of retirement on attaining the age of superannuation a government servant can encash his earned leave at credit upto

(A) 180 days (B) 200 days

(C) 240 days (D) 245 days

வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் அரசு ஊதியர் ஒருவர் அவருடைய ஈட்டிய விடுப்பு கணக்கில் உள்ள கீழ்காணும் அதிக பட்சமான எண்ணிக்கையிலான நாட்களை அரசுக்கு ஒப்படைப்பு செய்து ஊதியம் மற்றும் படிகளை பெற்றுக் கொள்ளலாம்

(A) 180 நாட்கள் (B) 200 நாட்கள்

(C) 240 நாட்கள் (D) 245 நாட்கள்

2. As per Fundamental Rules 110-114

(A) Foreign service counts for pension

(B) Does not counts for pension

(C) Half of the foreign service counts for pension

(D) Only six months of foreign service counts for pension

அடிப்படை விதிகள் 110-114-ன் படி

(A) அயல்பணி காலம் ஓய்வூதிய தகுதி பணி காலத்திற்கு கணக்கில் கொள்ளப்படும்

(B) அயல்பணி காலம் ஓய்வூதிய தகுதி பணி காலத்திற்கு கணக்கில் கொள்ளப்படாது

(C) பாதி எண்ணிகையிலான அயல் பணி காலம் ஓய்வூதிய தகுதி பணி காலத்திற்கு கணக்கில் கொள்ளப்படும்

(D) அயற்பணியில் 6 மாதம் மட்டுமே ஓய்வூதியத்திற்கு கணக்கில் கொள்ளப்படும்

3. The minimum qualifying service required for voluntary retirement of a government service is

(A) completing not less than 20 years of qualifying service (or) completed 50 years of age

(B) completing not less than 25 years of qualifying service (or) completed 55 years of age

(C) completing not less than 15 years of qualifying service (or) completed 50 years of age

(D) completing not less than 30 years of qualifying service (or) completed 55 years of age

அரசு பணியாளர் ஒருவர் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு கீழ்க்கண்ட குறைந்தபட்ச தகுதி பணி காலம் அவசியமாகும்

(A) 50 வயது கடந்திருக்க வேண்டும் அல்லது 20 வருட தகுதி பணி காலம் முடிந்திருக்க வேண்டும்

(B) 25 வருட தகுதி பணிக்காலம் முடித்திருக்க வேண்டும் அல்லது 55 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்

(C) 15 வருட தகுதி பணிக்காலம் முடித்திருக்க வேண்டும் அல்லது 50 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்

(D) 30 வருட தகுதி பணிக்காலம் முடித்திருக்க வேண்டும் அல்லது 55 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்

4. The periods not counted for qualifying service for pension are

(A) extraordinary leave without medical certificate and suspension treated as penalty

(B) compulsory wait

(C) extraordinary leave with medical certificate

(D) suspension period treated as eligible leave

கீழ்க்கண்ட காலங்கள் ஓய்வூதிய தகுதி பணிக்காலத்திற்கு கணக்கில் கொள்ளப்படாது

(A) மருத்துவ சான்றில்லாத அசாதாரண விடுப்பு மற்றும் தண்டனையாக கருதப்பட்ட தற்காலிக பணி நீக்க காலம்

(B) கட்டாய காத்திருப்பு

(C) மருத்துவ சான்றுடன் கூடிய அசாதாரண விடுப்பு

(D) தகுதியான விடுப்பாக முறைபடுத்தப்பட்ட தற்காலிக பணி நீக்கக் காலம்

5. Which one of these allowance is a compensatory allowance?

(A) travelling allowance

(B) equipment allowance

(C) uniform allowance

(D) ration allowance

கீழ்க்கண்டவற்றுள் எவை ஈடு செய்யும் படியாகும்?

(A) சுற்றுப்பயணப்படி

(B) கருவிகளுக்கான படி

(C) சீருடைப்படி

(D) ரேஷன்படி (ration allowance)

6. The following leave periods will not count for increment

(A) Overstayal of leave and extraordinary leave without medical certificate

(B) Earned leave

(C) Casual leave

(D) Unearned leave on medical certificate

கீழ்க்கண்ட காலங்கள் ஊதிய உயர்விற்கு கணக்கில் கொள்ளப்படாது

(A) மருத்துவ சான்றில்லாத அசாதாரண விடுப்பு (ஊதியமில்லாத) மற்றும் உரிய அனுமதியின்றி விடுப்பில் இருத்தல்

(B) ஈட்டிய விடுப்பு

(C) நற்செயல் விடுப்பு

(D) மருத்துவ சான்றின்பேரிலான ஈட்டா விடுப்பு

7. Rate of daily allowance allowed for the time of absence from headquarters from 6-01 hours and upto 12 hours

(A) 30% (B) 40%

(C) 70% (D) 100%

6-01 முதல் 12 மணி நேரம் வரை ஒருவர் தலைமையிடத்தில் இல்லாமல் முகாம் இடத்தில் இருப்பின் கீழ்க்கண்ட சதவீதத்தில் தினப்படி அனுமதிக்கப்படும்

(A) 30% (B) 40%

(C) 70% (D) 100%

8. The maximum rate of travelling allowance advance to a government servant is

(A) 50% of probable expenditure (B) 60% of probable expenditure

(C) 75% of probable expenditure (D) 100% of probable expenditure

அரசுப் பணியாளருக்கு அதிகபட்சமாக அனுமதிக்கப்படும் பயண முன்பணம் அளவு

(A) 50% உத்தேச செலவினம் (B) 60% உத்தேச செலவினம்

(C) 75% உத்தேச செலவினம் (D) 100% உத்தேச செலவினம்

9. Amount of advance of pay on transfer eligible for an officer who is on a monthly basic pay of Rs. 10,000 at the time of relief and Rs. 15,000 at the new station is

(A) Rs. 5,000 (B) Rs. 8,000

(C) Rs. 10,000 (D) Rs. 15,000

ரூ. 10,000 மாத ஊதியம் பெறும் அரசு பணியாளருக்கு பணியிட மாறுதலில் புதிய பணியிடத்திற்கு (ஊதியம் ரூ. 15,000) செல்லும் போது வழங்கப்படும் ஊதிய முன்பணம்

(A) ரூ. 5,000 (B) ரூ. 8,000

(C) ரூ. 10,000 (D) ரூ. 15,000

10. The unearned leave on private affairs eligible for an assistant on completion of twelve years of regular service is

(A) one month (B) two months

(C) three months (D) six months

பன்னிரண்டு ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி நிறைவு செய்த உதவியாளருக்கு தகுதியான “சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு” அளவு

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) ஆறு மாதங்கள்

11. Eligible period of foreign service count for pension is

(A) full period of foreign service

(B) 3/4 period of foreign service

(C) 1/2 period of foreign service

(D) 1/4 period of foreign service

ஓய்வூதிய தகுதி பணி காலத்திற்கு கணக்கில் கொள்ளப்படும் அயல் பணி காலம்

(A) அயல் பணி காலம் முழுவதும்

(B) 3/4 வரையிலான அயல் பணி காலம்

(C) 1/2 வரையிலான அயல் பணி காலம்

(D) 1/4 வரையிலான அயல் பணி காலம்

12. A post carrying a definite rate of pay sanctioned for a limited time is called as

(A) tenure post

(B) temporary post

(C) permanent post

(D) sanctioned post

ஒரு குறிப்பிடப்பட்ட கால வரையறை வரை அனுமதிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் கொண்ட ஒரு பதவி

(A) குறுகியகால பணியிடம்

(B) தற்காலிக பதவி

(C) நிரந்தர பதவி

(D) ஒப்பளிக்கப்பட்ட பதவி

13. 'Compulsory wait' is being governed under

(A) Rule 9(6)(b) of F.R (B) Rule 49 of F.R.

(C) Pension rule 18 (D) Pension rule 19

கட்டாயக் காத்திருப்பு எந்த விதியின் கீழ் விளக்கப்படுகிறது

(A) அ.வி 9(6)(ஆ) (B) அ.வி. 49

(C) ஓய்வூதிய விதி 18 (D) ஓய்வூதிய விதி 19

14. As per F.R. 106 in cases involving a change of station, the maximum preparation time allowed for a government servant during transfer is

(A) 3 days (B) 4 days

(C) 5 days (D) 6 days

அடிப்படை விதி 106-ன்படி பணி இடம் மாறுதல் பெறும் பணியாளருக்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச தயாரிப்பு காலம்

(A) 3 நாட்கள் (B) 4 நாட்கள்

(C) 5 நாட்கள் (D) 6 நாட்கள்

15. As per F.R. 106 in cases involving a change at station, the joining time allowed to a government servant is subject to maximum of

(A) 6 days (B) 8 days

(C) 10 days (D) 30 days

அடிப்படை விதி 106-ன் படி பணியிட மாற்றம் பெறும் பணியாளருக்கு அதிகபட்சமாக அனுமதிக்கப்படும் பணி ஏற்பு இடைக்காலம் (joining time)

(A) 6 நாட்கள் (B) 8 நாட்கள்

(C) 10 நாட்கள் (D) 30 நாட்கள்

16. A government servant who is transferred from "A" stations to "B" station total distance is 700 k.m. at which he travelled 400 k.m. by trains and 300 k.m. by bus. The number of days allowed for journey to him is

(A) two days (B) three days

(C) four days (D) five days

"A" இடத்திலிருந்து "B" இடத்திற்கு 700 கி.மீ. தூரம் பணியிட மாற்றம் பெற்ற பணியாளர் 400 கி.மீ. தூரம் இரயில் பயணம் மூலமும் 300 கி.மீ. பேருந்து மூலமும் பயணம் செய்கிறார். அவருக்கு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட நாட்கள் எத்தனை?

(A) இரண்டு நாட்கள் (B) மூன்று நாட்கள்

(C) நான்கு நாட்கள் (D) ஐந்து நாட்கள்

17. Two years old child of a government servant during his journey on transfer to new station accompanied with him is eligible for the following ticket fare

(A) full ticket (B) half ticket

(C) three fourth ticket fare (D) not eligible for ticket fare

பணியிட மாறுதல் பெற்ற பணியாளரின் 2 வயது குழந்தை பணியாளருடன் புதிய இடத்திற்கு செல்லும்போது குழந்தைக்கு அனுமதிக்கப்படும் பயணக்கட்டணம்

(A) முழு டிக்கெட் (B) அரை டிக்கெட்

(C) முக்கால் டிக்கெட் (D) டிக்கட் கட்டணம் அனுமதியில்லை

18. As per travelling allowance rules the incidental charges are admissible for a journey of

(A) 100 kilometres (B) 120 kilometres

(C) 130 kilometres (D) more than 160 kilometres

பயணப்படி விதிகளின்படி இடைநிகழ் செலவு கீழ்க்கண்ட தூரப்பயணங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

(A) 100 கி.மீ. (B) 120 கி.மீ.

(C) 130 கி.மீ. (D) 160 கி.மீ. மேல்

19. As per travelling allowance rules the incidental charges admissible in ordinary track is

(A) one fourth of the D.A.

(B) one fifth of the daily allowance

(C) three fourth of the daily allowance

(D) half of the daily allowance

பயணப்படி விதிகளின்படி சாதாரண வழித்தடங்களுக்கு அனுமதிக்கப்படும் இடைநிகழ் செலவு

(A) தினப்படியில் நான்கில் ஒரு பங்கு

(B) தினப்படியில் ஐந்தில் ஒரு பங்கு

(C) தினப்படியில் நான்கில் மூன்று பங்கு

(D) தினப்படியில் பாதி அளவு

20. As per the Tamil Nadu pension rules "Foreign Service" is defined as

(A) service in which a government servant receives his pay with sanction of government from any source other than the consolidated fund of the union or of the state or the union territory

(B) service in a foreign country

(C) service in other Indian state

(D) government service in other state

ஓய்வூதிய விதிகளின்படி "அயல்பணிக்கான" வரையறை

(A) இந்திய அரசு, மாநில அரசு, யூனியன் பிரதேச அரசு ஆகியவற்றின் தொகுப்பு நிதி அல்லாத ஒரு நிதியிலிருந்து அரசு ஒப்பளிப்புடன் ஊதியம் பெறும் ஒரு அரசுப் பதவி

(B) அயல்நாட்டில் புரியும் பணி

(C) இந்தியாவின் பிறமாநிலங்களில் பணி செய்வது

(D) வெளிமாநிலங்களில் அரசு பணி செய்வது

21. Which of the following period does not count for to arrive at net qualifying service for pension?

(A) earned leave period

(B) extraordinary leave with medical certificate

(C) extraordinary leave without medical certificate

(D) suspension period treated as eligible leave

கீழ்க்கண்ட பணியாளரின் ஓய்வூதிய தகுதிபெறும் பணிக்காலத்தினை கணக்கிட எடுத்துக்கொள்ளப்படமாட்டது.

(A) ஈட்டிய விடுப்பு காலம்

(B) மருத்துவ சான்றிதழின் பேரிலான அசாதாரண விடுப்பு

(C) அசாதாரண விடுப்பு மருத்துவ சான்று இல்லாது

(D) தகுதியான விடுப்பாக வரைமுறைப்படுத்தப்பட்ட தற்காலிக பணி நீக்கக் காலம்

22. As per Tamil Nadu pension rules date of Birth of a government servant is arrived at when his year of Birth only known then his date of Birth is assumed as

(A) first day of July of that year

(B) first day of May of that year

(C) fifteenth day of July of that year

(D) first day of January of that year

ஓய்வூதிய விதிகளின் படி அரசுப் பணியாளரின் பிறந்த வருடம் மட்டுமே தெரிகின்ற நேர்வில் அவருடைய பிறந்த மாதம் மற்றும் தேதி கீழ்கண்டவாறு கணக்கில் கொள்ளப்படும்.

(A) அந்த ஆண்டின் ஜூலை முதல் நாள்

(B) அந்த ஆண்டின் மே மாத முதல் நாள்

(C) அந்த ஆண்டின் ஜூலை மாதம் பதினைந்தாவது நாள்

(D) அந்த ஆண்டின் ஜனவரி மாத முதல் நாள்

23. A government servant retires on 31.12.2014. His date of annual increment falls due on first day on January every year. His pensionary benefits are calculated based on

(A) December 2014 last pay drawn

(B) Average emoluments

(C) After giving a notional increment on 01.01.2015 and last pay drawn arrived at

(D) After giving two notional increments on 01.01.2015 and last pay drawn arrived at

ஜனவரி முதல் தேதியில் வழக்கமாக ஆண்டு ஊதிய உயர்வு பெறும் பணியாளர் 31.12.2014-ல் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருடைய ஓய்வூதிய பலன்கள் கீழ்க்கண்டவற்றை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படும்

(A) டிசம்பர் 2014-ல் பெற்ற கடைசி ஊதியம்

(B) சராசரி ஊதியம்

(C) 01.01.2015-ல் கருத்தியலாக ஒரு ஊதிய உயர்வு அளித்து கடைசியாக பெற்ற சம்பளம் கணக்கிட்டு ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படவேண்டும்

(D) 01.01.2015 கருத்தியலாக இரண்டு ஊதிய உயர்வு அளித்து கடைசி ஊதியம் கணக்கிட்டு ஓய்வூதியம் கணக்கிட வேண்டும்

24. The portion of a pension commuted shall be restored in full as and when a pensioner

(A) completes a period of 15 years from the date of his retirement when such commutation is effective during the first month of his retirement

(B) completes a period of 10 years from the date of his retirement when such commutation is effective during the first month of his retirement

(C) completes a period of 12 years from the date of his retirement when such commutation is effective during the first month of his retirement

(D) completes a period of 20 years from the date of his retirement when such commutation is effective during the first month of his retirement

ஓய்வூதியதாரரால் தொகுத்துப் பெறப்பட்ட ஓய்வூதியம் மீண்டும் முழுமையான ஓய்வூதியம் பணியாளர் பெற்றிட

(A) பணியாளர் ஓய்வு பெற்ற மாதத்திலேயே தொகுப்புத் தொகை பெறப்பட்டிருப்பின் ஓய்வு பெற்ற நாளில் இருந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னர்

(B) பணியாளர் ஓய்வு பெற்ற மாதத்திலேயே தொகுப்புத் தொகை பெறப்பட்டிருப்பின் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 10 ஆண்டுகள் முடிவடைந்தப் பின்னர்

(C) பணியாளர் ஓய்வு பெற்ற மாதத்திலேயே தொகுப்புத் தொகை பெறப்பட்டிருப்பின் ஓய்வு பெற்ற நாளில் இருந்து 12 ஆண்டுகளுக்குப் பின்னர்

(D) பணியாளர் ஓய்வு பெற்ற மாதத்திலேயே தொகுப்புத் தொகை பெறப்பட்டிருப்பின் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 20 ஆண்டுகளுக்குப் பின்னர்

25. As per Fundamental Rules of Tamil Nadu government consolidated fund means

(A) consolidated fund of India

(B) consolidated fund of a union territory

(C) consolidated fund of the state of Tamil Nadu in article 266(i) of the constitution

(D) fund allotted to a particular department

தமிழ்நாடு அடிப்படை விதிகளின்படி தொகுப்பு நிதி என்பது

(A) இந்திய அரசின் தொகுப்பு நிதி

(B) யூனியன் பிரதேசத்தின் தொகுப்பு நிதி

(C) இந்திய அரசமைப்பு சட்டத்தின் படி 266(i)-ன் படி தமிழ்நாடு அரசின் தொகுப்பு நிதி

(D) குறிப்பிட்ட துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி

26. As per the Tamil Nadu fundamental rules the following period is treated as duty for a government servant

(A) overshayal of joining time

(B) course of training authorised by government

(C) extra ordinary leave without medical certificate

(D) period of suspension treated as such

அடிப்படை விதிகளின்படி கீழ்க்கண்ட காலம் அரசுப்பணியாளருக்கு பணிக்காலமாக கருதப்படும்

(A) மிகையாக துய்க்கப்பட்ட பணியேற்பிடை காலம்

(B) அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பயிற்சி காலம்

(C) மருத்துவ சான்றில்லாத அசாதாரண விடுப்பு

(D) தண்டனையாக கருதப்பட்ட தற்காலிக பணி நீக்கக் காலம்

27. As per Fundamental Rule the period from 25$^{th}$ January to 13$^{th}$ May is expressed as

(A) 3 months and 20 days (B) 3 months and 21 days

(C) 5 months (D) 3 months and 19 days

அடிப்படை விதிகளின் படி 25 ஜனவரி மாதத்திலிருந்து 13 மே மாதம் வரையிலான காலம் கீழ்கண்டவாறு கொள்ளப்படும்

(A) 3 மாதங்கள் மற்றும் 20 நாட்கள் (B) 3 மாதங்கள் மற்றும் 21 நாட்கள்

(C) 5 மாதங்கள் (D) 3 மாதங்கள் மற்றும் 19 நாட்கள்

28. A supernumerary post is also called as

(A) Shadow post (B) Vacant permanent post

(C) Temporary post (D) Vacant post

ஒரு "Supernumerary Post" இவ்வாறும் அறியப்படும்

(A) நிழல் பதவி (B) காலியாகவுள்ள நிரந்தர பதவி

(C) தற்காலிக பதவி (D) காலியாகவுள்ள பதவி

29. Supernumerary post means

(A) A person oriented post created for a limited period and for a limited purpose to accommodate a person in certain contingencies

(B) A post carrying a definite rate of pay sanctioned for a limited time

(C) A permanent post

(D) A temporary post

"Supernumerary Post"க்கான வரையறை

(A) ஒரு தனிநபருக்காக சில அவசிய காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்கு அரசினால் உருவாக்கப்பட்ட பதவி

(B) ஒரு குறிப்பிட்ட காலவறையறை வரை அனுமதிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பளம் கொண்ட பதவி

(C) நிரந்தர பதவி

(D) தற்காலிக பதவி

30. Except leave on medical certificate (or) study leave under Rule-84, no government servant who has not completed five years of service, shall be granted leave of any kind for a continuous period exceeding

(A) three months at any one time (B) five months at any one time

(C) six months at any one time (D) nine months at any one time

ஐந்து வருடம் பணி நிறைவு செய்யாத அரசுப் பணியாளர் ஒருவருக்கு மருத்துவ சான்றின் பேரிலான விடுப்பு மற்றும் அடிப்படை விதி 84-ன் படியான கல்வி விடுப்பு தவிர அனுமதிக்கப்படக்கூடிய அதிகபட்ச தகுதியான எந்த ஒரு விடுப்பும்

(A) ஒரு நேர்வில் மூன்று மாதங்கள் வரை (B) ஒரு நேர்வில் ஐந்து மாதங்கள் வரை

(C) ஒரு நேர்வில் ஆறு மாதங்கள் வரை (D) ஒரு நேர்வில் ஒன்பது மாதங்கள் வரை

31. The time interval of a period of following years between two spells of the maximum leave permissible under F.R. 18(1), (2) is

(A) one year (B) two years

(C) three years (D) four years

அ.வி. 18(1), (2)-ன் படி இரண்டு அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்ட விடுப்புகளுக்கான கால இடைவெளி கீழ்கண்டவாறு ஆகும்

(A) ஒரு வருடம் (B) இரண்டு ஆண்டுகள்

(C) மூன்று ஆண்டுகள் (D) நான்கு ஆண்டுகள்

32. As per transfer travelling allowance rules the family members of a government servant are eligible for reimbursement of the following cost

(A) Bus or train fare, D.A. eligible for government servant

(B) Incidental charges

(C) II tier A/C ticket fare

(D) First class A/C fare

மாறுதல் பயணப்படி விதிகளின்படி அரசு பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள் கீழ்க்கண்ட கட்டணங்களை திரும்பப் பெற தகுதி உள்ளவர்கள்

(A) அரசுப் பணியாளருக்கான பேருந்து அல்லது இரயில் பயணக் கட்டணம் மற்றும் தினப்படி மட்டும்

(B) இடைநிகழ் செலவுகள்

(C) II அடுக்கு A/C கட்டணம்

(D) முதல் வகுப்பு A/C கட்டணம்

33. Time limit for submitting tour travelling allowance claim is

(A) one month from the date of which particular journey is completed

(B) two months from the date of which particular journey is completed

(C) three months from the date of which particular journey is completed

(D) four months from the date of which particular journey is completed

சுற்றுப் பயணப் படி கோரிக்கைப் பட்டியல் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான கால வரையறை

(A) குறிப்பிட்ட பயணம் முடிவடைந்த தேதியில் இருந்து மாதத்திற்குள்

(B) குறிப்பிட்ட பயணம் முடிந்த தேதியில் இருந்து இரண்டு மாதத்திற்குள்

(C) குறிப்பிட்ட பயணம் முடிவடைந்த தேதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள்

(D) குறிப்பிட்ட பயணம் முடிவடைந்த தேதியில் இருந்து நான்கு மாதத்திற்குள்

34. Time limit for submitting transfer travelling allowance claim is

(A) within one month from the completion of each journey

(B) within two months from the completion of each journey

(C) within three months from the completion of each journey

(D) within four months from the completion of each journey

மாறுதல் பயணப்படி கோரிக்கைப்பட்டியல் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான கால வரையறை

(A) ஒவ்வொரு பயணமும் முடிவுற்ற தேதியில் இருந்து ஒரு மாதத்திற்குள்

(B) ஒவ்வொரு பயணமும் முடிவுற்ற தேதியில் இருந்து இரண்டு மாதங்களுக்குள்

(C) ஒவ்வொரு பயணமும் முடிவுற்ற தேதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள்

(D) ஒவ்வொரு பயணமும் முடிவுற்ற தேதியில் இருந்து நான்கு மாதங்களுக்குள்

35. Time limit for submitting leave travel concession claims is

(A) within one month from the date of completion of return journey

(B) within two months from the date of completion of return journey

(C) within three months from the date of completion of return journey

(D) within four months from the date of completion of return journey

விடுப்பு பயணச்சலுகை கோரிக்கைப் பட்டியல் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான கால வரையறை

(A) பயணம் முடிந்து திரும்பவந்த ஒரு மாதத்திற்குள்

(B) பயணம் முடிந்து திரும்பவந்த இரண்டு மாதத்திற்குள்

(C) பயணம் முடிந்து திரும்பவந்த மூன்று மாதத்திற்குள்

(D) பயணம் முடிந்து திரும்பவந்த நான்கு மாதத்திற்குள்

36. As per travelling allowance rules the following person is not a member of family of a government servant

(A) son (B) daughter

(C) spouse (D) step mother

பயணப் பட்டியல் விதிகளின்படி கீழ்கண்டவர் அரசு பணியாளரின் குடும்ப உறுப்பினராக கருதப்பட மாட்டார்

(A) மகன் (B) மகள்

(C) கணவன் அல்லது மனைவி (D) வளர்ப்புத்தாய்

37. As per travelling allowance rules the children who have not completed 12 years of age is eligible for

(A) 3/4 of train fare (B) 1/2 ticket fare

(C) 1/3 of train fare (D) 2/3 of train fare

பயணப்படி விதிகளின்படி 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கீழ்கண்டவற்றிற்கு தகுதியானவர்கள்

(A) 3/4 பங்கு இரயில் கட்டணம் (B) 1/2 டிக்கட் கட்டணம்

(C) 1/3 பங்கு இரயில் கட்டணம் (D) 2/3 பங்கு இரயில் கட்டணம்

38. A family member of a government servant is eligible for transfer travelling allowance claim when the travelled with in the following time limit after the date of relief of government servant from old station

(A) one month (B) two months

(C) four months (D) six months

அரசுப் பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள் பணியாளர் பணியிடமாறுதலில் பணிவிடுவிக்கப்பட்ட நாளிலிருந்து கீழ்க்கண்டகால வரையறைக்குள் பழைய இடத்திலிருந்து புதிய இடத்திற்கு பயணம் செய்யும் நிலையில் மாறுதல் பயணப்படி கோரிப்பெற்றிட தகுதி பெறுவர்

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) நான்கு மாதங்கள் (D) ஆறு மாதங்கள்

39. Study leave is given to a Government Servant who completes

(A) 6 years of service

(B) 8 years of service

(C) 5 years of service

(D) 10 years of service

உயர் கல்விக்கான விடுப்பு அரசு ஊழியருக்கு கீழ்க்கண்டவற்றுள் எத்தனை ஆண்டுகள் பணி முடித்தவருக்கு வழங்கலாம்

(A) 6 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு

(B) 8 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு

(C) 5 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு

(D) 10 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு

40. While computing the amount of tour advance the Train fare (or) Bus fare will be

(A) included (B) excluded

(C) excluded with daily allowance (D) included with daily allowance

பயணப்படி முன்பணம் வரையறை கணக்கிட இரயில் கட்டணம் அல்லது பேருந்து கட்டணம்

(A) உள்ளடக்கியது (included) (B) உள்ளடக்காதது (excluded)

(C) தினப்படி சேர்த்து உள்ளடக்காதது (D) தினப்படியுடன் சேர்த்து உள்ளடக்கியது

41. Tour travelling allowance is admissible when the journey exceeds the radius of the following distance from the headquarters of a government servant

(A) 5 K.M. (B) 6 K.M.

(C) 7 K.M. (D) 8 K.M.

அரசுப் பணியாளரின் தலைமையிடத்திலிருந்து கீழ்காணும் தூரத்திற்கு அதிகமான தூரம் கொண்ட இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் போது மட்டுமே சுற்றுப்பயணப்படி அனுமதிக்கப்படும்

(A) 5 கி.மீ. (B) 6 கி.மீ.

(C) 7 கி.மீ. (D) 8 கி.மீ.

42. As per travelling allowance rules controlling officer means

(A) head of office

(B) head of the department

(C) an officer above the status of the claimant and to whom the claimant is administratively subordinate

(D) an I.A.S. officer

பயணப்படி விதிகளின்படி கட்டுப்பாட்டு அதிகாரிக்கான வரையறை

(A) அலுவலக தலைவர்

(B) துறைத் தலைவர்

(C) பட்டியல் கோரும் அலுவலருக்கு மேலதிகாரி மற்றும் பட்டியல் கோரும் அலுவலருக்கு நிர்வாக ரீதியில் உயர் அலுவலர்

(D) இந்திய ஆட்சிப்பணி அதிகாரி

43. A woman government servant is entitled to claim transfer travelling allowance on account of her husband only

(A) If he is not a government servant

(B) If he is a private sector employee

(C) If he is differently abled person

(D) If he is wholly dependent on her

பெண் அரசுப் பணியாளர் தனது கணவருக்கு மாறுதல் பயணப்படி கோரி பெற்றிட கீழ்க்கண்ட சூழ்நிலையில் மட்டுமே முடியும்

(A) கணவர் அரசுப் பணியாளராக இல்லாத போது

(B) கணவர் தனியார் நிறுவன பணியாளர் ஆக இருக்கும் போது

(C) கணவர் மாற்றுத் திறனாளியாக உள்ள போது

(D) மனைவியினை முழுவதும் சார்ந்து வாழும் கணவர்

44. Flat charges are allowed when the distance at the terminal points should be

(A) 100 metres (B) 300 metres

(C) 200 metres (D) 0.5 km or more

தளப்படி (Flat charges) வழங்கப்படுவதற்கு தகுதியான முனையங்களுக்கிடையேயான தூரம் கீழ்கண்டவற்றுள் இருக்க வேண்டும்

(A) 100 மீட்டர்கள் (B) 300 மீட்டர்கள்

(C) 200 மீட்டர்கள் (D) 0.5 கி.மீ மற்றும் அதற்கும் மேல் தூரம்

45. As per T.A. Rules Grade-I officer on transfer is permitted to take the following number of his personal servants to the new station and to claim bus fare or second class fare by train

(A) 5 (B) 4

(C) 3 (D) 2

மாறுதல் பயணப்படி விதிகளின்படி Grade-I அலுவலர் பணியிட மாறுதலின்போது தன்னுடன் கீழ்கண்ட எண்ணிக்கையிலான பணியாளர்களை புதிய பணியிடத்திற்கு அழைத்து சென்று பேருந்து கட்டணம் அல்லது 2-வது வகுப்பு இரயில் கட்டணம் கோரிப்பெறலாம்

(A) 5 (B) 4

(C) 3 (D) 2

46. As per T.A. Rules the following are not admissible for personal servants of an officer on transfer

(A) daily allowance (B) flat charges

(C) bus fare (D) train fare

மாறுதல் பயணப்படி விதிகளின்படி அரசு பணியாளரின் வேலை ஆட்களுக்கு கீழ்கண்ட செலவினங்களை மாறுதல் பயணப்படி பட்டியலில் கோரிப்பெற தகுதியில்லை

(A) தினப்படி (B) தளப்படி (flat charges)

(C) பேருந்து கட்டணம் (D) இரயில் கட்டணம்

47. According to G.O.Ms.No : 237, finance (Pay Cell) Dept., Dated : 01.06.2009, the government employees are classified into the following grades for the purpose of travelling allowance rules.

(A) A, B, C, D (B) I, II, III and IV

(C) IA, IB, IC, II, III and IV (D) I, II, III, IV and V

அரசாணை எண் : 237, நிதி (ஊ.கு)த் துறை, நாள் : 01.06.2009-ன்படி, பயணப்படி விதிகளுக்காக கீழ்க்கண்ட நிலைகளாக அரசுப் பணியாளர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்

(A) A, B, C, D (B) I, II, III மற்றும் IV

(C) IA, IB, IC, II, III மற்றும் IV (D) I, II, III, IV மற்றும் V

48. As per government letter No : 58007/Finance (allowances) 2009-I, Dated 10.10.2009, Grade-II employee can travel in the following class during rail journey whenever then first class is not available in the train

(A) First class A/C coach

(B) II tier class A/C coach

(C) III tier class A/C coach

(D) II class coach

அரசுக்கடிதம் எண். 58007/நிதி (படிகள்), 2009-I, நாள் 10.10.2009-ன்படி Grade-II அலுவலர் முதல் வகுப்பு இரயில் பெட்டி வசதி இல்லாத நிலையில் கீழ்காணும் இரயில் பெட்டியில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது

(A) முதல் வகுப்பு குளிர்சாதன பெட்டி

(B) இரண்டு அடுக்கு குளிர்சாதன பெட்டி

(C) மூன்றடுக்கு குளிர்சாதன இரயில் பெட்டி

(D) இரண்டாம் வகுப்பு பெட்டி

49. In respect of contributory pension scheme the contribution of the employees in the revised pay scale shall be calculated at

(A) 12% of basic pay and D.A.

(B) 12% of basic pay + grade pay and D.A.

(C) 10 percent of pay in the pay band + grade pay and dearness allowance

(D) 10 percent of the pay in the pay band + grade pay alone

பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் பணியாளருடைய பங்களிப்பு தொகை திருத்திய ஊதிய விகிதத்தின்படி கீழ்கண்டவாறு கணக்கிடப்படும்.

(A) 12% அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(B) 12% அடிப்படை ஊதியம் + தர ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(C) 10 சதவீதமான அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(D) 10 சதவீதமான அடிப்படை ஊதியம் + தர ஊதியம் மட்டும்

50. As per G.O.Ms.No : 319, Finance (pension) Department, dated 23.07.2009, the maximum amount of Death cum retirement gratuity payable to a government servant from 01.01.2006 during his superannuation is

(A) Rupees 25 lakhs (B) Rupees 20 lakhs

(C) Rupees 15 lakhs (D) Rupees 10 lakhs

அரசாணை எண் 319, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 23.07.2009-ன் படி 1.1.2006 முதல் வயதுமுதிர்வில் ஓய்வுபெறும் அரசுப் பணியாளருக்கு வழங்கக்கூடிய உயர்ந்த பட்ச ஓய்வு மற்றும் இறப்பு பணிக்கொடை (DCRG)

(A) ரூ. 25 இலட்சங்கள் (B) ரூ. 20 இலட்சங்கள்

(C) ரூ. 15 இலட்சங்கள் (D) ரூ. 10 இலட்சம் மட்டும்

51. As per G.O.Ms.No : 307, Finance (pay cell) Department Dated 13.10.2017, the revised rate of daily allowance per day for Grade-II employees other than Chennai city is

(A) Rs. 160 (B) Rs. 200

(C) Rs. 300 (D) Rs. 400

அரசாணை எண் 307, நிதித் (ஊ.கு) துறை நாள் 13.10.2017-ன்படி, Grade-II அலுவலருக்கு சென்னை தவிர பிறஇடங்களுக்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச தினப்படி

(A) ரூ. 160 (B) ரூ. 200

(C) ரூ. 300 (D) ரூ. 400

52. The minimum rate of G.P.F. monthly subscription amount to be recovered from the government servant is

(A) 10% of Basic pay, Grade pay, Special pay, Personal pay and D.A.

(B) 11% of Basic pay, Grade pay, Special pay, Personal pay only

(C) 12% of Basic pay, Grade pay, Special pay, Personal pay and D.A.

(D) 12% of Basic pay, Grade pay, Special pay, Personal pay only

பணியாளரிடமிருந்து குறைந்த பட்சமாக பிடித்தம் செய்யப்பட வேண்டிய பொது வருங்கால வைப்புநிதி மாத சந்தா

(A) 10% அடிப்படை ஊதியம், தர ஊதியம், சிறப்பு ஊதியம், தனி ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(B) 11% அடிப்படை ஊதியம், தர ஊதியம், சிறப்பு ஊதியம், தனி ஊதியம் மட்டும்

(C) 12% அடிப்படை ஊதியம், தர ஊதியம், சிறப்பு ஊதியம், தனி ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(D) 12% அடிப்படை ஊதியம், தர ஊதியம், சிறப்பு ஊதியம், தனி ஊதியம் மட்டும்

53. A government servant can reimburse the following expenditure in his leave travel concession claim

(A) cost of journey by eligible class to self and his eligible family members

(B) cost of journey by eligible class and daily allowance

(C) cost of journey by eligible class and daily allowance incidental charges

(D) cost of journey by any class

அரசுப் பணியாளர் தனது விடுப்பு பயணச்சலுகை கோரிக்கைப் பட்டியலில் கீழ்கண்ட செலவினங்களை கோரிப்பெறலாம்

(A) தகுதியான பயணக்கட்டணம் பணியாளர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும்

(B) பணியாளருக்கு தினப்படி மற்றும் தகுதியான பயணக்கட்டணம்

(C) தகுதியான பயணக்கட்டணம், தினப்படி மற்றும் இடைநிகழ் செலவு

(D) எந்த வகுப்பிற்குமான பயணக் கட்டணம்

54. A government servant can avail leave travel concession claim for both ways once in

(A) five years (B) four years

(C) three years (D) two years

அரசுப் பணியாளர் இரண்டு வழி விடுப்பு பயண சலுகை கீழ்க்கண்ட ஆண்டுகளுக்கு ஒரு முறை பெறலாம்

(A) ஐந்து ஆண்டுகள் (B) நான்கு ஆண்டுகள்

(C) மூன்று ஆண்டுகள் (D) இரண்டு ஆண்டுகள்

55. The employees shall be entitled to travel outside the state by availing leave travel concession subject to the condition that the reimbursement of travel cost should be limited to a maximum distance of the following from place of their work

(A) 1000 kms (B) 900 kms

(C) 800 kms (D) 400 kms

அரசு பணியாளர்களுக்கான விடுப்பு பயண சலுகையில் தமிழ்நாட்டிற்கு வெளியே மேற்கொள்ளப்படும் பயணங்களுக்கு அதிகபட்சமாக கீழ்கண்ட தூரத்திற்கான பயணக்கட்டணத்தினை வரையறை செய்து திரும்பப் பெறலாம்

(A) 1000 கி.மீ. (B) 900 கி.மீ.

(C) 800 கி.மீ. (D) 400 கி.மீ.

56. As per govt. letter number 70674/Finance (All) / 2009-I Dates 22.3.2010, the officers having jurisdiction of more than three districts, the monthly ceiling of travelling allowance shall be

(A) 10% of Basic pay and Grade pay

(B) 11% of Basic pay and Grade pay

(C) 12% of Basic pay and Grade pay

(D) 13% of Basic pay and Grade pay

அரசுக் கடிதம் எண் : 70674/நிதி (படிகள்)/2009-I நாள் : 22.3.2010-ன் படி, மூன்று மாவட்டங்களுக்கு மேல் நிர்வாக எல்லை உள்ள அலுவலர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சுற்றுப்பயணப்படி அளவு

(A) 10% அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம்

(B) 11% அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம்

(C) 12% அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம்

(D) 13% அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம்

57. The number of days of unearned leave on private affairs eligible for an assistance on completion of three years of regular service is

(A) 180 days (B) 120 days

(C) 90 days (D) 60 days

மூன்று ஆண்டுகள் முறையான பணி முடித்த ஒரு உதவியாளருக்கு அனுமதிக்கத் தகுதியுள்ள சொந்த காரணங்களுக்கான ஈட்டாத விடுப்பின் அளவு

(A) 180 நாட்கள் (B) 120 நாட்கள்

(C) 90 நாட்கள் (D) 60 நாட்கள்

58. The maximum rate of commuted value of pension eligible for a government servant retiring on superannuation pension of Rs. 3,000 per month on the date of retirement is

(A) Rs. 3,000 (B) Rs. 2,500

(C) Rs. 2,000 (D) Rs. 1,000

ரூ. 3,000 மாத ஓய்வூதியமாக பெறத்தகுதியான ஓய்வூதியதாரருக்கு ஓய்வு பெறும நாளில் அதிக பட்சமாக தொகுத்து பெறக்கூடிய ஓய்வூதிய தொகை

(A) ரூ. 3,000 (B) ரூ. 2,500

(C) ரூ. 2,000 (D) ரூ. 1,000

59. When an officer has to wait compulsorily for orders of posting, after expiry of leave or due to administrative reasons. The period of such waiting shall be treated as duty and will be called

(A) overstayal of joining time

(B) transit period

(C) joining time

(D) compulsory wait

விடுப்பு முடிந்து வரும் அலுவலர் ஒருவர் பணி நியமன உத்தரவிற்கு நிர்வாக காரணங்களினால் கட்டாயமாக காத்திருக்கும் நிலையில், அந்த காத்திருக்கும் காலமானது பணிக்காலமாக கருதப்படும் மேலும் அது கீழ்கண்டவாறு அழைக்கப்படும்

(A) மிகுதியாக துய்க்கப்பட்ட பணியேற்பிடை காலம்

(B) பயண காலம் (transit period)

(C) பணியேற்பிடை காலம்

(D) கட்டாய காத்திருப்பு

60. Unearned leave on private affairs can be availed for following number of days at a time and it combined with earned leave should not exceed the following months at a time

(A) 180 days and 12 months

(B) 120 days and 9 months

(C) 120 days and 6 months

(D) 90 days and six months

தனிப்பட்ட காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு அதிகபட்சமாக ஒருமுறை எடுக்கக்கூடிய கால அளவு மற்றும் அவ்விடுப்பு ஈட்டிய விடுப்புடன் சேர்ந்து எடுக்கும்போது அதிகபட்சமாக ஒரு நிகழ்வில் அனுமதிக்கக்கூடிய அளவு

(A) 180 நாட்கள் மற்றும் 12 மாதங்கள்

(B) 120 நாட்கள் மற்றும் 9 மாதங்கள்

(C) 120 நாட்கள் மற்றும் 6 மாதங்கள்

(D) 90 நாட்கள் மற்றும் ஆறு மாதங்கள்

61. How the recoveries are made from the government servant towards pay advance?

(A) Advance of pay shall be recovered in single instalment from the first full months salary in new station

(B) It shall be recovered in three instalments from the first full months salary drawn by government servant in the new station

(C) Recovered in ten instalments

(D) Recovered in five instalments

ஊதிய முன்பணம் பெற்ற பணியாளரிடமிருந்து எவ்வாறு திரும்ப அத்தொகை பிடித்தம் செய்யப்படுகிறது?

(A) புதிய அலுவலகத்தில் பணியாளர் பெறும் முழுமாத ஊதியத்தில் ஒரே தவணையாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(B) புதிய அலுவலகத்தில் பணியாளர் பெறும் முழுமாத ஊதியங்களில் மூன்று மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(C) பத்து மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்

(D) ஐந்து மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்

62. How the recovery is made from government servant towards advance of transfer T.A. sanctioned on transfer?

(A) Advance of T.T.A. shall be recovered in three instalments from the pay of individual

(B) It shall be recovered in one lumpsum from the T.T.A. bill of government servant

(C) It shall be recovered in two instalments from the T.T.A bill of government servant

(D) It shall be recovered in five instalments from the T.T.A. bill of government

மாறுதல் பயணப்படிக்கான முன்பணம் பணியாளரிடமிருந்து எவ்வாறு திரும்ப பிடித்தம் செய்யப்படுகிறது?

(A) பணியாளரின் ஊதியத்திலிருந்து மூன்று தவணைகளில் மாறுதல் பயணப்படி முன்பணம் பிடித்தம் செய்யப்படும்

(B) பணியாளரின் மாறுதல் பயணப்படி கோரிக்கைப் பட்டியல் தொகையிலிருந்து ஒரே தவணையாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(C) பணியாளரின் மாறுதல் பயணப்படி பட்டியலிலிருந்து இரண்டு தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்

(D) பணியாளரின் மாறுதல் பயணப்படி பட்டியலிலிருந்து ஐந்து தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்

63. A government servant under suspension and is receipt of subsistance allowance, was dismissed from service by the competent authority. In this circumstances

(A) the subsistance allowance paid to him to be fully recovered from him and remitted to government a/c

(B) 50% of the subsistance allowance paid to him to be recovered from him and remitted to government account

(C) 1/3 of him to be recovered paid to him to be recovered from him and remitted to government account

(D) the subsistance allowance already paid need not be recovered on his dismissal

தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள அரசுப் பணியாளர் பிழைப்பூதியம் பெற்று வருகிறார். இந்நிலையில் அவர் உரிய அதிகாரம் உள்ள அலுவலரால் நிரந்தர பணி நீக்கம் செய்யப்படுகிறார். இந்நிலையில்,

(A) அவருக்கு அளிக்கப்பட்டு வந்த பிழைப்பூதியம் முழுவதும் அவரிடமிருந்து திரும்ப பெறப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்

(B) 50% பிழைப்பூதியம் பிடித்தம் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்

(C) 1/3 பங்கு பிழைப்பூதியம் அவரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்

(D) பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பிழைப்பூதியம் பிடித்தம் செய்யப்பட வேண்டியதில்லை

64. Un earned leave on medical certificate application together with medical certificate should reach the office with in the following number of days from the date of entering

(A) 15 days (B) 10 days

(C) 9 days (D) 7 days

மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டாவிடுப்பு விண்ணப்பம் விடுப்பில் செல்லும் நாளில் இருந்து கீழ்க்கண்ட கால கெடுவிற்குள் உரிய மருத்துவ சான்றுடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

(A) 15 நாட்கள் (B) 10 நாட்கள்

(C) 9 நாட்கள் (D) 7 நாட்கள்

65. The Tamilnadu pension rules 1978 came into force on

(A) January 1978

(B) February 1978

(C) December 1978

(D) January 1979

த.நா. ஓய்வூதிய விதிகள் 1978 இந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது

(A) ஜனவரி 1978

(B) பிப்ரவரி 1978

(C) டிசம்பர் 1978

(D) ஜனவரி 1979

66. The maximum admissible period of unearned leave on medical certificate to a government servant in superior service who have completed more than 20 years of service is

(A) 580 days (B) 540 days

(C) 520 days (D) 500 days

20 வருடங்கள் முறையான பணி முடித்த மேல்நிலை பணியாளருக்கு அனுமதிக்கப்படக்கூடிய அதிகபட்ச மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பின் அளவு

(A) 580 நாட்கள் (B) 540 நாட்கள்

(C) 520 நாட்கள் (D) 500 நாட்கள்

67. During transit period the following are not eligible for a government servant

(A) Basic pay and grade pay

(B) Dearness allowance

(C) Cash allowance and F.T.A.

(D) C.C.A. and H.R.A.

அரசுப் பணியாளர் பணியேற்பிடை காலத்தில் உள்ளபோது கீழ்கண்டவை அவருக்கு அனுமதிக்கப்படுவதில்லை

(A) அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம்

(B) அகவிலைப்படி

(C) நிலையான பயணப்படி மற்றும் ரொக்கப்படி (Cash allowance)

(D) நகர ஈட்டுப்படி மற்றும் வீட்டு வாடகைப்படி

68. Life certificate of a pensioner to be produced once in

(A) four years

(B) three years

(C) two years

(D) a year

ஓய்வூதியர் ஒருவர் கீழ்க்கண்ட கால இடைவெளியில் Life certificate கட்டாயமாக அளிக்க வேண்டும்

(A) நான்கு வருடங்கள்

(B) மூன்று வருடங்கள்

(C) இரண்டு வருடங்கள்

(D) வருடத்திற்கு ஒரு முறை

69. Incidental charges are the charges given to a government servant during tour

(A) to meet conveyance expenses incurred to reach to terminal points at the beginning or at the end of camps

(B) to meet bus or train fare

(C) to meet unclassified expenses such as portarage etc. incurred by him, at the terminal points at journey

(D) auto rickshaw or cycle rickshaw fare

இடைநிகழ் செலவுகள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அரசு பணியாளருக்கு அவர் அலுவல் நிமித்தமாக பயணம் மேற்கொள்ளும் போது அளிக்கப்படுகிறது

(A) முகாம் பயண முனையங்களில் வாகனங்களில் செல்லும் கட்டணத்தினை ஈடு செய்ய

(B) பேருந்து அல்லது இரயில் கட்டணங்களை ஈடு செய்திட

(C) பயண முனையங்களில் வரையறுக்கப்படாத செலவினங்களான ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி ஆகியவற்றினை ஈடுசெய்திட

(D) ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷா கட்டணத்தினை ஈடு செய்திட

70. As per F.R. 56 extension of service is given to government employees upto the age of

(A) 65 years (B) 64 years

(C) 63 years (D) 60 years of age

அடிப்படை விதி 56-ன்படி அரசுப் பணியாளருக்கு கீழ்க்கண்ட வயது வரை பணி நீட்டிப்பு வழங்கப்படுகிறது?

(A) 65 வயது (B) 64 வயது

(C) 63 வயது (D) 60 வயது வரை

71. During reemployment period a government servant can get the following

(A) consolidated salary

(B) salary equivalent to the pay last drawn

(C) amount equivalent to pension

(D) salary equivalent to the pay last drawn but deducting the admissible pension

பணி மறுநியமனம் பெற்ற பணியாளர் கீழ்க்கண்டவற்றை பெறுகிறார்

(A) தொகுப்பு ஊதியம்

(B) கடைசியாக பெற்ற ஊதியத்திற்கு இணையான தொகை

(C) ஓய்வூதியத்திற்கு சமமான தொகை

(D) கடைசியாக பெற்ற ஊதியத்தில் தகுதியான ஓய்வூதியத்தினை கழித்து பெறப்படும் தொகைக்கு சமமாக

72. Compulsory deduction from the subsistance grant due to a government servant under suspension is

(A) income tax

(B) amount due to co-operative credit societies

(C) premium due on postal life insurance

(D) refund of advances taken from general provident fund

தற்காலிக பணி நீக்கத்திலுள்ள பிழைப்பூதியம் பெறும் அரசுப் பணியாளரிடமிருந்து கட்டாயமாக பிடித்தம் செய்யப்படவேண்டிய கீழ்க்கண்ட தொகைகள்

(A) வருமான வரி

(B) கூட்டுறவு கடன் சங்கத்திற்கான பிடித்தம்

(C) அஞ்சலக ஆயுள்காப்பீட்டு சந்தா தொகை

(D) பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்ட தற்காலிக முன் பணப்பிடித்தம்

73. Superannuation pension is the pension sanctioned to an government servant

(A) Who is retired from service on attaining age at 58 years

(B) Who is compulsorily retried from service on attaining age of 55 years

(C) Who is compulsorily retried from service on attaining age of 59 years

(D) Who is compulsorily retried from service on attaining age of 62 years

அரசு பணியாளருக்கு வழங்கப்படும் வயது முதிர்வு ஓய்வூதியம் என்பது

(A) 58 வயது பூர்த்தியடைந்ததின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்குவது

(B) 55 வயது பூர்த்தியடைந்தன் காரணமாக பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்குவது

(C) 59 வயது பூர்த்தியடைந்தன் காரணமாக பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்குவது

(D) 62 வயது பூர்த்தியடைந்தன் காரணமாக பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்குவது

74. Compensation pension is the pension sanctioned to an officer who is to be discharged from service due to

(A) disability of the person

(B) compulsory retirement

(C) voluntary retirement

(D) abolition of a post

ஈடுகட்டும் ஓய்வூதியம் என்பது பணியாளர் ஒருவர் கீழ்க்கண்ட காரணங்களினால் பணியிலிருந்து விடுவிக்கப்படும் போது அப்பணியாளருக்கு வழங்கப்படக்கூடியது

(A) பணியாளரின் இயலாமை காரணமாக

(B) கட்டாய ஓய்வு

(C) தன்விருப்ப ஓய்வு

(D) ஒரு பணியிடம் ஒழிக்கப்பட்டதன் விளைவாக

75. Special pay means an addition of the nature of pay to the emoluments of a post or of a government servant granted in consideration of

(A) specially arduous nature of duties

(B) a specific addition to work or responsibility

(C) due to un-healthiness of the locality in which the work is performed

(D) all the above

ஒரு பதவிக்காகவோ அல்லது பணியாளருக்கோ வழங்கப்படும் சிறப்பு ஊதியம் என்பது

(A) பணியின் கடினத் தன்மையினை உத்தேசித்து வழங்கப்படுவது

(B) குறிப்பிட்ட கூடுதல் பணி மற்றும் பொறுப்பு நிமித்தமாக வழங்குவது

(C) பணி செய்யுமிடத்தின் சுகாதாரமற்ற நிலையினை கருத்தில் கொண்டு வழங்கப்படுவது

(D) மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு வழங்கப்படுவது

76. A government servant can surrender and encash pay and allowances upto 30 days of earned leave at his credit once in

(A) a year (B) two years

(C) three years (D) four years

அரசுப் பணியாளர் ஒருவர் தனது கணக்கிலுள்ள 30 நாட்கள் ஈட்டிய விடுப்பினை கீழ்க்கண்ட கால இடைவெளியில் ஒவ்வொரு முறையும் அரசுக்கு ஒப்படைப்பு செய்து ஊதியம் மற்றும் படிகளைப் பெறலாம்

(A) ஆண்டு தோறும் (B) இரண்டு வருடத்திற்கு ஒரு முறை

(C) மூன்று வருடங்கள் (D) நான்கு வருடங்கள்

77. The maximum amount under medical reimbursement facility to a government servant is 30% on basic pay and grade pay admissible as on

(A) 01.06.1988 (B) 01.01.2009

(C) 01.10.2009 (D) 01.01.2006

கீழ்க்கண்ட தேதியிலான அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 30% அதனை அதிகபட்சமாக அரசுப் பணியாளர் மருத்துவ செலவினை ஈடு செய்யும் சலுகையினை பெறலாம்

(A) 01.06.1988 (B) 01.01.2009

(C) 01.10.2009 (D) 01.01.2006

78. An employee was received on transfer from station ‘A’ to station ‘B’ involving a journey of 300 km by train on 01.08.2017 (Tuesday) A.N. at station ‘A’. What is the latest date by which he should joint at station ‘B’?

(A) 08.08.2017 (B) 07.08.2017

(C) 09.08.2017 (Wednesday) (D) 10.08.2017

01.08.2017 (செவ்வாய் கிழமை) பிற்பகல் அன்று அரசுப் பணியாளர் பணியிட மாறுதலில் பழைய பணியிடத்திலிருந்து பணி விடுவிக்கப்படுகிறார். பழைய பணியிடம் A-விலிருந்து புதிய பணியிடம் ‘B’-க்கான தூரம் 300 கி.மீ. இரயிலில் பயணம் செய்கிறார். அவர் புதிய பணியிடம் ‘B’-ல் பணி ஏற்க வேண்டிய தேதியினை குறிப்பிடுக.

(A) 08.08.2017 (B) 07.08.2017

(C) 09.08.2017 (புதன் கிழமை) (D) 10.08.2017

79. The maternity leave is not admissle to employees having more than

(A) one living child

(B) two living children

(C) three living children

(D) four living children

கீழ்க்கண்ட எண்ணிக்கையிலான குழந்தை உயிருடன் இருக்கும் நிலையில் பெண் அரசுப் பணியாளருக்கு மகப்பேறு விடுப்பு அனுமதிக்கப்படுவதில்லை

(A) ஒரு குழந்தை மட்டும் உயிருடன் இருக்கும் போது

(B) இரண்டு குழந்தைகள் உயிருடன் இருக்கும் நிலையில்

(C) மூன்று குழந்தைகள் உயிருடன் இருக்கும் போது

(D) நான்கு குழந்தைகள் உயிருடன் இருக்கும் போது

80. To award selection grade to an employee the following period does not count for computing 10 years at qualifying service

(A) period spent on earned leave

(B) period spend on U.E.L. on private affairs

(C) unearned leave on medical certificate

(D) the period of reversion, extra ordinary leave with out medical certificate

பணியாளருக்கு தேர்வுநிலை வழங்கிட தகுதிப் பணிக்காலம் 10 ஆண்டுகள் கணக்கிடுவதற்கு கீழ்க்கண்ட காலங்கள் தகுதியில்லை

(A) ஈட்டிய விடுப்பு துய்த்த காலம்

(B) சொந்த காரணங்களுக்கான ஈட்டாவிடுப்பு துய்த்த காலம்

(C) மருத்துவ சான்றின்பேரில் ஈட்டா விடுப்பு துய்த்த காலம்

(D) பணி இறக்க காலம் (reversion), மருத்துவ சான்று இல்லாத அசாதாரணமான விடுப்பு (ஊதியமில்லாத)

ROUGH WORK

ROUGH WORK